# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 08 | கத்தோலிக்கத் திருமறை | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ......................................................................................

**01. மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட காலப்பகுதி எது?
   I. கி.பி.80-90 II. கி.பி.85-90 III. கி.பி.80-85 IV. கி.பி.90-95
2. லூக்கா நற்செய்தியில் காணப்படும் பாடல்கள்,
   I. 1 II. 2 III. 3 IV. 4
3. அல்லேலூயா புகழ்கீதம் அடங்கும் வழிபாடு யாது?
   I. இறைவார்த்தை வழிபாடு II. ஆரம்ப வழிபாடு
   III. நன்றி வழிபாடு IV. திருமுழுக்கு வழிபாடு
4. மூவொரு இறைவனின் வெளியடையாளமாக விளங்குவது,
   I. பக்தி சபைகள் II. கிறிஸ்தவ குடும்பம்
   III. அன்பியம் IV. துறவற சபைகள்
5. மெசியா பற்றிய இறைவாக்குகளை முன்வைத்த இறைவாக்கினர் அல்லாதவர்,
   I. மீக்கா II. யோவேல் III. எசாயா IV. சாமுவேல்
6. இயேசுவின் வருகையை ஆயத்தம் செய்தவர்,
   I. பேதுரு II. பவுல்
   III. திருமுழுக்கு யோவான் IV. தாவீது
7. தூய ஆவியின் கனிகளில் ஒன்று,
   I. ஞானம் II. நிறைகற்பு III. அறிவு IV. பக்தி
8. இறுதி இராவுணவு இடம்பெற்ற தினமாக நினைவு கூறப்படுவது.
   I. பெரிய வியாழன் II. பெரிய சனி
   III. பெரிய வெள்ளி IV. உயிர்ப்பு ஞாயிறு
9. யோசேப்பு எக்குடும்ப வகுப்பைச் சேர்ந்தவர்?
   I. தாவீது II. ஈசாய் III. ஆபிரகாம் IV. மேசே
10. தூய ஆவியின் கொடைகள் எத்தனை?
    I. 10 II. 7 III. 9 IV. 12
11. இயேசு திருத்தூதர்களுக்கு தூயஆவியை வழங்கியது,
    I. இறுதி இராவுணவின்போது II. எம்மாவு சென்றபோது
    III. பெந்தகொஸ்தேவின் போது IV. விண்ணேற்பின் போது



kalvi.lk

12. கூற்று : இயேசு தனது பகிரங்கபணியை கலிலேயாவில் ஆரம்பித்தார்.
காரணம் : இயேசுவின் வருகையை ஆயத்தம் செய்தவர் பவுல் ஆவார்.
I. கூற்று சரி காரணம் பிழை II. கூற்றும் காரணமும் சரி
III. கூற்றும் பிழை காரணமும் பிழை IV. கூற்று பிழை காரணம் சரி

13. தற்போதைய திருத்தந்தை திருத்தந்தையாக நியமனம் பெற்றது.
I. 2013 II. 2014 III. 2016 IV. 2017

14. தூய அகுஸ்தினார் எத்தனை வயதில் திருமுழுக்குப் பெற்றார்.
I. 30 II. 26 III. 29 IV. 33

15. மூட நம்பிக்கை எத்தனையாம் கட்டளைக்கு எதிரானது.
I. 4ம் கட்டளைக்கு II. 3ம் கட்டளைக்கு
III. 1ம் கட்டளைக்கு IV. 6ம் கட்டளைக்கு

16. “ஓய்வு நாளைக் கருத்தாய் கடைப்பிடி” எனக் கூறும் நூல்,
I. எண்ணிக்கை II. விடுதலைப்பயணம்
III. லேவியர் IV. இணைச்சட்டம்

17. திருத்தந்தை 12வது பயஸ் (பத்திநாதர்) திருவழிபாடு பற்றி வெளியிட்ட சுற்றுமடல்
I. அன்பிய மகிழ்வு II. குடும்ப வாழ்வு
III. இரக்கத்தின் பாடல் IV. இறை நடுநிலையாளர்

18. திருவழிபாட்டின் காலங்கள் எத்தனை?
I. 5 II. 8 III. 7 IV. 3

19. கிறிஸ்தவ வாழ்வின் மையமாக அமைவது எது?
I. உறுதிப்பூசுதல் II. திருப்பலி III. திருமுழுக்கு IV. ஒப்புரவு

20. இரக்கம் உடையோர் பேறுபெற்றோர் ஏனெனில், அவர்கள் ....................................
I. நிறைவு பெறுவர் II. ஆறுதல் பெறுவர்
III. கடவுளைக் காண்பர் IV. இரக்கம் பெறுவர்

(2X20=40புள்ளிகள்)

## 02) இறைவார்த்தையைப் பூர்த்தி செய்க.

1. நீங்கள் போய் எல்லா ...................................................... சீடராக்குங்கள்.

2. “உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின் மேல் என் .................................................. கட்டுவேன்".

3. உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும் இல்லாதோரிடமிருந்து ...................................... எடுக்கப்படும்.

4. இரண்டு அங்கிகளை உடையவர் .................................. பகிர்ந்து கொள்ளட்டும்.

5. இன்று இந்த வீட்டிற்கு .................................. உண்டாயிற்று இழந்து போனதை மீட்கவே மானிட மகன் வந்தார்.

(2X5=10புள்ளிகள்)



kalvi.lk

# பகுதி - II

❖ **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. 1. இறையாட்சி என்பது யாது?
2. இறையாட்சி பற்றி கூறும் உவமைகள் 3 தருக.
3. இறையாட்சி உவமை ஒன்றைக் குறிப்பிட்டு அதன் படிப்பினையைச் சுருக்கமாகத் தருக.

(2+3+5புள்ளிகள்)

02. 1. புனித லூக்காவிடம் காணப்பட்ட திறமைகள் எவை?
2. லூக்கா நற்செய்தியில் வரும் உவமைகள் 3 தருக.
3. லூக்கா நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் ஐந்து தருக.

(2+3+5புள்ளிகள்)

03. 1. தூய ஆவியாருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் 2 தருக.
2. உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெறுவதற்குத் தேவையான தகுதிகள் 3தருக.
3. உறுதிப்பூசுதலைப் பெற்றுக்கொள்வதனால் கிடைக்கும் கொடைகள் எவை?

(2+3+5புள்ளிகள்)

04. 1. புதுமை என்றால் என்ன?
2. இயேசு செய்த புதுமைகளின் வகைகள் எவை?
3. இயேசு செய்த புதுமைகள் இயேசுவை யார் என என்பித்துக் காட்டுகின்றன.

(2+3+5புள்ளிகள்)

05. 1. கத்தோலிக்க திருவழிபாட்டின் ஊற்றும் உச்சமுமாய் இருப்பது எது?
2. திருப்பலியில் பங்கு கொள்ளாமல் நற்கருணை பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் 3 தருக.
3. நற்கருணையின் சிறப்பியல்புகள் (பண்புகள்) எவை?

(2+3+5புள்ளிகள்)

06. 1. இயேசுவின் முன்னோடித்தூதர் யார்?
2. இயேசுவைப் பற்றிய திருமுழுக்கு யோவானின் சான்று யாது?
3. திருமுழுக்கு யோவானைப்போல் நீர் எவ்வாறு சான்று பகிர்ந்து வாழ்வீர்?

(2+3+5புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
அ. தூய லூக்கா
ஆ. தூய திருமுழுக்கு யோவான்
இ. தூய அகுஸ்தீனார்
ஈ. புதுமைகள்

(2X5=10புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457